IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O. S No. 231/2018

சாட்சி : DW1

பெயர் : சின்னமுத்து தேதி: 14-07-2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

30 மாத கால அவகாசத்தை நான்தான் நிர்ணயம் செய்தேன் என்றால் சரிதான். 14.12.2015-ஆம் தேதியன்று மொத்த தொகையும் செலுத்தி கிரயம் கொள்ள கொள்ள வாதி தயாராக உள்ளார் என்றாலும் நான்தான் காலஅவகாசம் கோரினேன் என்றால் தவறு. 01.06.2018-ஆம் தேதிக்கு முன்பாகவே வாதி பலமுறை என்னை அனுகி பாக்கி தொகையை பெற்றுக் கொண்டு கிரயம் செய்துதர கேட்டு வந்தார் என்றாலும் நான்தான் நேரம் சரியில்லை என்று சாக்குபோக்கு தவிர்த்துவந்தேன் என்றால் தவறு. என்னுடைய முதல் விசாரணை மற்றும் பதில் உரையில் கண்டுள்ள சங்கதிகள் ஒன்றோறொன்று முரண்பாடாக உள்ளது என்றால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கப்பட உள்ளதாக என்றால் தவறு. வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகும் இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பும் தாவா கிரய ஒப்பந்த பத்திரம் **வா.சா.ஆ-1** ஐ ரத்து செய்வதற்காக

சட்டப்படியாக நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–01 பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஒன்று என்றால் சரிதான். வாதியின் கணவர் தங்கமணிக்கும் இவ்வழக்கிற்கும் ஏதாவது சம்மந்தம் உண்டு என்றால் இல்லை. நானும் மேற்படி தங்கமணியும் ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ள வில்லை. பதிலுரை மற்றும் முதல் விசாரணையில் கண்டுள்ள சங்கதிகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்றால் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. **வா.சா–ஆ.01** கிரய பத்திரத்தை நான்தான் தயார் செய்த பதிவும் செய்து கொடுத்தேன் என்றால் தவறு. சிந்தாமணிதான் தயார் செய்தார். நாங்க **வா.சா.ஆ–01** கிரய ஒப்பந்த பத்திரத்தையும் தயார் செய்து பதிவுசெய்தேன் என்று சொன்னாலும் வழக்கிற்காக சிந்தாமணிதான் பதிவுசெய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உங்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் உங்களுக்கும், தங்கமணிக்கும் இடையே தனிப்பட்ட வரவுசெலவு கணக்கு தொடர்பானது என்று சொன்னால் தவறு.

பி.வா.சா.ஆ–01–ல் சிந்தாமணியின் பெயர் எங்கேயாவது உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ–02–ல் சிந்தாமணியின்

பெயர் எங்யாவது உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதில் இருந்து இன்றுவரை காலியாக உள்ளதுதான் என்றால் இல்லை பயிர் செய்து வருகிறேன். அவ்வாறு தாவா சொத்தில்தான் எந்தவித பயிறும் செய்திருக்க வில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு நான் பயிர் செய்திருக்கும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாததால் நான் பயிர் செய்து வருவதாக சொல்லும் சங்கதி தவறு என்று சொன்னால் சரியல்ல. குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வாதிக்கு கிரயம் செய்து கொடுக்காமல் வாதியை ஏமாற்றி வந்தேன் என்றால் தவறு.

ஒம்/– S. எழில்வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.